(6 pages) **Reg. No. :** ..................................

**Code No. : 30032** **Sub. Code : CMTA 52**

B.A. (CBCS) DEGREE EXAMINATION, NOVEMBER 2025.

ஐந்தாம் பருவம்

தமிழ் முதன்மைப்பாடம்

சங்க இலக்கியம்

(For those who joined in July 2021 and 2022 only)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. பெரும்பாணாற்றுப்படையில் இடம்பெற்றுள்ள பாடலடிகள் எத்தனை?

(அ) 500 (ஆ) 900

(இ) 269 (ஈ) 361

2. முந்நீர் வண்ணன் யார்?

(அ) இந்திரன் (ஆ) பிரமன்

(இ) முருகன் (ஈ) திருமால்

3. 'அறிதலும் அறிதியோ' எனத் தொடங்கும் பாடல் எந்தத் திணையைச் சார்ந்தது?

(அ) குறிஞ்சி (ஆ) முல்லை

(இ) நெய்தல் (ஈ) மருதம்

4. நற்றிணையின் அடிவரையறை எவ்வளவு?

(அ) 3-6

(ஆ) 9-12

(இ) 4-8

(ஈ) 13-31

5. குறிஞ்சிக் கலி பாடியவர் யார்?

(அ) கபிலர் (ஆ) பேயனார்

(இ) நல்லந்துவனார் (ஈ) ஓரம்போகியார்

6. அகநானூற்றின் 294வது பாடல் எத்திணையைச் சார்ந்தது?

(அ) முல்லை

(ஆ) குறிஞ்சி

(இ) மருதம்

(ஈ) பாலை

7. பதிற்றுப்பத்து யாரைப் பற்றிய பாடல்களாக அமைந்துள்ளன?

(அ) பாண்டியர் (ஆ) சோழன்

(இ) சேரர் (ஈ) பல்லவர்கள்

8. 'உழுதுஊர் காளை' என்ற பாடலை பாடியவர் யார்?

(அ) சோவூர்கிழார் (ஆ) ஆவூர் கிழார்

(இ) பூவூர் கிழார் (ஈ) சோயூர் கிழார்

9. தாமரைப் பூவோடு ஒப்பிடக்கூடிய ஊர் எது?

(அ) நெல்லை (ஆ) தென்காசி

(இ) மதுரை (ஈ) திருச்சி

10. 'வையை வருபுனல்' என்ற அடி இடம் பெற்ற நூல் எது?

(அ) புறநானூறு

(ஆ) பரிபாடல்

(இ) பதிற்றுப்பத்து

(ஈ) நீலகேசி



பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 250 சொற்களுக்கு மிகாமல் விடை தருக.

வினா (அ) அல்லது (ஆ) தேர்ந்தெடுக்க.

11. (அ) மருதநில நெய்வயல்கள் குறித்த பெரும்பாணாற்றுப் படையின் கருத்துக்களை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) பெரும்பாணாற்றுப்படை குறிப்பிடும் பட்டினத்து மக்களின் விருந்தோம்பலை எடுத்தியம்புக.

12. (அ) 'மடக்கண் தகரத்' எனத் தொடங்கும் நற்றிணைப் பாடற் கருத்தினை விளக்குக.

(அல்லது)

(ஆ) நும் பாடப்பகுதியில் அமைந்துள்ள குறந்தொகை மருதத்திணைப் பாடற் கருத்தினை விவரிக்க.

13. (அ) முல்லைக் கலியின் கருத்துக்களை நும்பாடப்பகுதியின் வழி விரித்துரைக்க.

(அல்லது)

(ஆ) அகநானூற்று முல்லைத் திணைப் பாடல் தரும் கருத்துகளை விவரிக்க.

14. (அ) இளஞ்சேரலின் மென்மைப் பிண்பினை விவரிக்க.

(அல்லது)

(ஆ) இளஞ்சேரல் இரும்பொறையின் அருட்சிறப்பினை எடுத்துரைக்க.

15. (அ) 'மாயோன் கொப்பூழ்' எனத் தொடங்கும் பாடற் கருத்தினை விளக்குக.

(அல்லது)

(ஆ) 'வையை வருபுனல்' பாடலின் சிறப்புகளை எடுத்தியம்புக.

பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 600 சொற்களுக்கு மிகாமல் விடை தருக.

வினா (அ) அல்லது (ஆ) தேர்ந்தெடுக்க.

16. (அ) பெரும்பாணாற்றுப்படை குறிப்பிடும் வலைஞர் குடியிருப்பு குறித்து விவரிக்க.

(அல்லது)

(ஆ) கச்சி மூதூரின் சிறப்புகளை விவரிக்க.



17. (அ) நற்றிணைப் பாடல்கள் தரும் கருத்துக்களைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) குறுந்தொகை பாலைத்திணைப் பாடல்களின் கருத்துக்களை எடுத்துரைக்க.

18. (அ) குறிஞ்சிக்கலி பாடலின் கருத்தினைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) அகநானூற்றுப் பாடல்கள் உணர்த்தும் கருத்துக்களைப் பகிர்க.

19. (அ) பதிற்றுப்பத்து ஒன்பதாம் பத்து உணர்த்தும் சேரரின் மாண்புகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) புறநானூற்றின் வாகைத்திணைப் பாடல் உணர்த்தும் கருத்துகளை எழுதுக.

20. (அ) 'தண்தமிழ் வேலி' எனத்தொடங்கும் பாடல் கருத்தினை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) மதுரை பற்றிய பரிபாடலின் கருத்துக்களை மதிப்பிடுக.